## தமிழீழ விடுதலைப் புலிகள்
## Liberation Tigers of Tamil Eelam

தலைமைச்செயலகம்,
தமிழீழம்,
08.03.90

# புதுயுகத்தைநோக்கி....

உலகில் எந்தவொரு மனித இனம் அடக்கப்படும்போதும் அதை எதிர்த்து அவ்வினம் ஆர்த்தெழுவதும்
தம்முடைய இறைமையையும் தாய்நாட்டையும் மீட்பதற்கான விடுதலைப் போராட்டத்தில் குதிப்பதும் இயல்
பானதே அது தவிர்க்க முடியாத வரலாற்றுக்கடமையாகவும் உள்ளது. இந்த வகையில் .... பிறிதோர் நாட்
டினால் அடிமை கொள்ளப்பட்ட எத்தனையோ நாட்டு மக்கள் தம்மீதும், தம் நாட்டின் மீதும் திணிக்கப்பட்ட
அடக்குமுறைக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் குதித்து தம்மையும் தம் தாய் நாட்டையும் அடிமைத்
தளையில் இருந்து மீட்டுள்ளனர் இன்று எத்தனையோ நாடுகளில் விடுதலைக்காகவும் அங்குள்ள மக்களின்
சுபீட்சத்திற்காகவும் உலகில் எத்தனையோ விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு சுதந்திரப் போராட்டமே மனித வரலாறாகவும் உள்ளது. இந்த வகையில் பெண்களின் வரலாறு
ஒரு தனி இடத்தைப் பிடிக்கிறது. தந்தை வழிச் சமுதாயத்தில் தோற்றம் கொண்ட பெண் ஒடுக்குமுறை இன்னும்
தொடர்கிறது. எனவே உரிமைகளை வென்றெடுப்பதற்காக உலகெங்கணும் பல பெண் விடுதலை இயக்கங்கள்
இயங்கி வருகின்றன.

ஒரு சமத்துவமான சமுதாயத்தை உருவாக்கி நாட்டு மக்களின் சுபீட்சத்தைப் பெற்றுக்கொள்வதற்கான
புரட்சிகரமான விடுதலைப்போராட்டத்தின் மூலம் ஆசிய நாடுகளில் பெண்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அடக்கு
முறைகள் ஓரளவிற்கேனும் தளர்த்தப்பட்டுள்ளன ஆனாலும் சமூக பொருளாதார ரீதியில் ஓர் பெண் ஓர்
ஆணைச்சார்ந்து வாழவேண்டிய நிலையுள்ளது. இன்றுள்ள சமுதாய அமைப்பு மாற்றப்படாத காரணத்தால்
இன்றும் உலகின் எந்தவொரு மூலையிலும் கூட பெண்கள் பூரண சுதந்திரத்தை உடையவர்களாக காணப்
படவில்லை

வீட்டு வேலைகளைப் பெண்களின் தலையில் சுமத்தி அவர்களை வீட்டோடு அடக்கி வைத்திருக்கும்
சமூகம், ஒரு பெண் தனது ஆற்றல்களையும் ஆளுமையையும் வளர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பளிப்பதில்லை.
இதனால் பெண் ஓர் ஊனப்பிறவிபோல் ஆக்கப்பட்டு ஆண்பிரஜையைப் போன்று சமூகத்தின் வளர்ச்சி
யிலும் நாட்டின் முன்னேற்றத்திலும் தனது பூரண பங்களிப்பைச் செலுத்தமுடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்
றாள்.

ஆனால் இத்தகைய அநீதியான சமூகம் சொல்லிக்கொள்வது என்ன வென்றால், பெண்கள் மென்மை
யானவர்கள், கடின வேலைகளைச் செய்ய மாட்டார்கள் தொழில் நுட்ப விடயங்களைப் புரிந்துகொள்ள
மாட்டார்கள் என்பதாகும்.

மாறாக தமது ஆற்றல்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்த சொற்பளவு பெண்கள் இன்று விண்
வெளியில் பறப்பதிலும் அண்டங்களிற் கிடையிலான ஆராய்ச்சியிலும் தங்கள் பங்கைச் செலுத்துகின்றனர்
தாம் சார்ந்த துறைகளில் பிரமிக்கத்தக்க அளவு முன்னேற்றத்தைக் காட்டியுள்ளனர். தொழில்நுட்பத்துறை
களிலும், அரசியலிலும் முன்னணியில் நிற்கின்றனர். மிகவும் கடினமானதுறையெனக்கருதப்படுகின்ற இராணு
வத்துறையில்கூட இவர்கள் பங்களிப்பு இடம்பெற்றுள்ளது.

இன்று மக்களின், மண்ணின் விடிவிற்காக ஆயுதமேந்திய
புரட்சிகரப் போராட்டங்களினால் விடுதலையடைந்த நாடுகளிலும் விடுதலைக்காகப் பேராடிக்கொண்டிருக்கும்
நாடுகளிலும் தம் மண்ணின், மக்களின் சுதந்திரத்திற்காக ஆயுதமேந்திய பெண்களின் எண்ணிக்கை கணிசமானது.
சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எரித்திரியாவில் 65% போராளிகள் பெண்களாக உள்ளதானது, அந்
நாட்டின் விடுதலைக்காகப் பெண்ணினம்தான் கூடிய பங்காற்றுகின்றனர் என்பதையே புலப்படுத்துகின்றது.
லிபியா, சீனா, போன்ற நாடுகளில் இராணுவத்தில் இணைந்து நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளில்
பெண்கள் ஈடுபடுகின்றனர்.

மொத்தத்தில் ஒரு நாட்டின் மிகவும் முக்கிய துறைகளான பாதுகாப்பு, பொருளாதாரம், அரசியல் என்பவற்றில் பங்குகொள்ளுவதன்மூலம் தம்மாலும் எதையும் செய்யமுடியும் என்பதை இன்று பெண்கள் நிரூபித்து வருகின்றார்கள்.

எமது நாட்டில் பெண்கள் பண்பாடு என்ற பெயரில் வீட்டினுள் முடக்கப்படுகின்றனர். இங்கு பெண் குழந்தை ஒன்று சிறு வயதாக இருக்கின்ற போதே அவள்மீது கட்டுப்பாடுகள் திணிக்கப்படுகின்றன. அவளுக்கு ஓரளவு வயது வந்ததும் கல்வி கற்கப் பெற்றோராலேயே தடை விதிக்கப்படுகின்றது. நகரப்புறங்களைத் தவிர ஏனைய இடங்களில் பெண்கள் உயர்கல்வி கற்க அவர்கள் பெற்றோர் அனுமதிப்பதில்லை. சீதனக்கொடுமையால் எத்தனையோ, இளம் பெண்கள் திருமண வாழ்வை இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆணும் பெண்ணும் செய்யும் ஒரேயளவு வேலைக்கு பெண்ணுக்கு ஊதியம் குறைவாக வழங்கப்படுகின்றது. பெண்கள் எந்த விஷயத்திலும் சுதந்திரமாக முடிவு எடுக்கமுடியாமல் தந்தை, சகோதரன், கணவன், அல்லது வேறோர் உறவினர்க்கு அடங்கியே வாழவேண்டியுள்ளது.

எமது நாட்டிலும் பெண்கள், சமூக பொருளாதார அமைப்புகளில் ஓர் ஆணைச் சார்ந்து நிற்க வேண்டிய நிலையே உள்ளது.

இதனாற்தான் சார்ந்து நிற்கும் ஆணின் இழப்பின் பின் அவர்களில் சிலரால் சுயமாக வாழ முடிவதில்லை பல இன்னல்களை எதிர்நோக்க நேரிடுகின்றது.

சமூகத்தின் பெண் இனத்தின் மீதான அடக்குமுறைகளே தவறான நடத்தையுடையவர்களை உருவாக்குகிறது

இந்நிலையை மாற்றி பெண்விடுதலையை வென்றெடுப்பதற்காக தமிழீழத்தில் உருவாக்கப்பட்டுள்ள பெண் விடுதலை ஸ்தாபனங்கள் பெண்விடுதலைக்கான தெளிவான செயற்பாட்டையோ, செயற்திறனையோ கொண்டிருக்கவில்லை. அவை தமது மேல்மட்ட அந்தஸ்தையும், நலன்களையும் பாதுகாப்பதில் பட்டுமே குறியாயிருப்பதுடன் வெறும் எழுத்தளவில், பேச்சளவில் மட்டுமே பெண்விடுதலையை முன்வைப்பது வேதனைக்குரிய உண்மைகளாகும்

வெளியுலகம்பற்றிய பரந்துபட்ட அறிவு கிடையாத காரணத்தால் வீடுகளில் இருந்து சினிமாப் படங்கள் நடிகைகள் பற்றிக் கதைப்பதிலும், அவர்களைப்போல் தம்மை அழகுபடுத்திக்கொள்ளுவதிலும் இன்று பெரும்பாலான பெண்கள் தமது கூடிய நேரத்தை வீண்விரயம் செய்கின்றனர்.

சினிமாப்பட மோகமும், வெளிநாட்டு மோகமும் இன்று எமது கலாச்சாரத்தில் சீரழிவுகளை ஏற்படுத்துகின்றன.

அன்னிய உளவுப்படையாலும் சமூக விரோதிகளாலும் திட்டமிட்டரீதியில் புகுத்திவிடப்பட்ட போதைவஸ்து பாவனையும் எமது நாட்டில் பெருமளவு ஊடுருவி எங்கள் சமூகத்தை சீரழித்து வருகிறது. இதில் பெருந்தொகையில் பாதிக்கப்படுபவர்களும் பெண்களே.

இன்று எம்மினத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள எதிரியை புறமுதுகிடச்செய்து ஒரு சமதர்ம தமிழீழத்தை உருவாக்குவதன் மூலம் எம் மக்களின் எதிர் காலத்தை ஒளிமயமாக்க வேண்டும் என்பதற்காக தமிழீழத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் ஆயுதம் ஏந்தி களத்தில் இறங்கியுள்ளனர். ஆனாலும் தமிழீழப் பெண்கள் சனத்தொகையைப் பொறுத்தவரையில் இன்னமும் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்க இடமுண்டு.

தமிழீழத்தில் பெண்கள் வாழ்வை சுபிட்சமனதாக்க தேசிய விடுதலையோடு இணைந்தே பெண் விடுதலையை வென்றெடுக்க வேண்டும். எனவே அனைத்துப் பெண்களும் எம்மோடு ஓரணியாக வேண்டும்.

எம் சமூகத்திலுள்ள சீரழிவு நடவடிக்கைகளை அடியோடழித்து எமது தாயகத்தை மீட்டெடுப்பதற்கும் பெண்களின் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்குமான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்போம் என்று உறுதி செய்கிறோம்.

## "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

மகளிர் பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்

வெளியீடு:- பிரச்சார வெளியீட்டு வாரியம், மகளிர் பிரிவு தமிழீழவிடுதலைப்புலிகள்